# பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஷெய்க் முஸ்தபா இப்னு அல்அதவீ 15

ஷெய்க் அஹ்மது இப்னு அபுல் ஐனைன் 16

முன்னுரை 20

நன்றியுடன் ஒரு சொல் 24

1 நரகவாசிகளில் பலர் பெண்களே! 27

2 உஷார், பெருங்குழப்பம் பெண்களே! 30

3 விபச்சாரம் ஒரு பெரும்பாவம்; அதுவும் அண்டைவீடு என்றால் ஆக மிகப் பெரிய பாவம் 33

4 விபச்சாரத்தை வெறுப்பதுதான் நல்ல மனதின் இயற்கை குணம் 40

5 விபச்சாரம் பெருகுவது மறுமைநாள் நெருங்குவதின் அடையாளமே! 44

6 பிரச்சினைகளை தூண்டும் ஆபத்தான சில அழகுமுறைகள் 45

7 விபச்சாரத்தின் வெவ்வேறு வகைகள் 48

8 மஹ்ரமான ஆண் துணையில்லாமல் பெண் பயணம் செய்வது கூடாது 52

9 அனுமதி தேடுவதின் ஒழுக்கங்கள் 55

10 அணிகலன்களின் ஓசையை ஒலிக்கச் செய்வது விலக்கப்பட்டதே! 61

11 பார்வையைத் தாழ்த்துவதும் மறைவுறுப்பைப் பாதுகாப்பதும் 63

12 அந்நியப் பெண்ணிடம் முஸாஃபஹா - கைலாகு கொடுப்பதும் அவளது உடலைத் தொடுவதும் விலக்கப்பட்டதே! 72

13 நங்கையர் நறுமணம் பூசி வெளியே வருவதும் தடுக்கப்பட்டதே! 75

14 கன்னியர் கனிந்து பேசுவதும் தடைசெய்யப்பட்ட ஒன்று 77

15 அந்நியப் பெண்ணுடன் ஓர் ஆடவன் தனிமையில் இருப்பதும் தடைசெய்யப்பட்டதே! 78

16 பத்தினித்தனம், சுயபாதுகாப்பு பற்றிய கட்டளைகளும் அதன் சிறப்புகளும் 83

17 படுக்கையில் பிள்ளைகளைப் பிரித்துப் படுக்க வைத்தல் 89

18 கெட்ட செயல்களைச் செய்ததற்குத் தண்டனை உண்டு 90

19 விபச்சாரத்தின் வழிகளிலிருந்து விலகிச் செல்லல் 96

20 பெண்கள் தங்களை ஆண்களைப் போல் ஒப்பனை செய்வது விலக்கப்பட்டதே! 101

21 சரியான பெண்ணைத் தேர்ந்தெடுத்தல் 106

22 திருமணம் செய்துகொள்ளல் 109

23 அல்லாஹ்வுக்காக மட்டும் என்ற மனத்தூய்மை 110

24 திறந்தே இருக்கிறது பாவிகளுக்கான பாவமன்னிப்பின் வாசல் 113

25 பாவமன்னிப்பு தரும் பலன்கள் 120

# 1

## நரகவாசிகளில் பலர் பெண்களே!

❀

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடமிருந்து இம்றான் இப்னு ஹுஸைன் ؓ அறிவிக்கிறார்:

اطَّلَعْتُ فِي الْجَنَّةِ فَرَأَيْتُ أَكْثَرَ أَهْلِهَا الْفُقَرَاءَ وَاطَّلَعْتُ فِي النَّارِ فَرَأَيْتُ أَكْثَرَ أَهْلِهَا النِّسَاءَ

நான் சுவனத்தைப் பார்த்தேன். அதில் அதிகமாக ஏழைகள் இருந்தார்கள். நரகத்தைப் பார்த்தேன், அதில் அதிகமாக பெண்களைப் பார்த்தேன்.[2] *(புகாரீ 5198, முஸ்லிம் 2737)*

அபுத்தையாஹ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: மூத்ரஃப் இப்னு அப்துல்லாஹ்வுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். இருவரில் ஒருவரின் வீட்டிலிருந்து வந்தபோது மற்றொரு மனைவி, இன்னவளின் வீட்டிலிருந்துதானே நீங்கள் வருகிறீர்கள் என்று கேட்டபோது மூத்ரஃப் சொன்னார்: நான் இம்றான் இப்னு ஹுஸைனின் வீட்டிலிருந்து வருகிறேன். அவர் அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக இப்படி என்னிடம் கூறினார்:

---

2 ஆண்களின் மனோஇச்சைகளைத் தூண்டி இழுக்கக்கூடிய அளவுக்கு கவர்ச்சியாக அலங்காரம் செய்து, பல்வேறு நறுமணங்களைப் பூசிக்கொண்டு வெளியே சுற்றுவதும், உடலுறுப்புகள் எடுப்பாகத் தனித்துத் தெரியும்படி மெல்லிய ஆடைகளை அணிவதும்தான் இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ்வுக்குக் கோபத்தை வரவழைக்கிறது. அவனுடைய கோபம் நம்மை நரகத்தில்தான் தள்ளும் என்பது சொல்லவும் வேண்டுமோ? இப்படித்தான் பெண்கள் நரகத்திற்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.

இமாம் தஹபீ ؒ கூறுகிறார்கள்: பெண்கள், அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் மற்றும் கணவர்களுக்கும் கட்டுப்பட்டு நடக்காமல் இருப்பதும், வெளியே சென்றால் மக்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய, விலையுயர்ந்த, அழகிய பட்டாடைகளை அணிவதும்தான் காரணம். அவை பெண்களுக்கு மன நிம்மதியைத் தரலாம். ஆனால், அவற்றைப் பார்ப்பவர்களின் நிம்மதியைக் கெடுத்துவிடுமே!? (அல்கபாஇர் 176)

# 3

## விபச்சாரம் ஒரு பெரும்பாவம்; அதுவும் அண்டைவீடு என்றால் ஆக மிகப் பெரிய பாவம்

❀

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﷺ அவர்களால் அறிவிக்கப்படுகிறது:

أَيُّ الذَّنْـبِ عِنْدَ اللهِ أَكْبَرُ قَالَ أَنْ تَجْعَلَ لِلَّهِ نِدًّا وَهُوَ خَلَقَكَ قُلْتُ : ثُمَّ أَيٌّ؟ قَالَ ثُمَّ أَنْ تَقْتُلَ وَلَدَكَ خَشْـيَةَ أَنْ يَطْعَمَ مَعَكَ قُلْتُ : ثُمَّ أَيٌّ ؟ قَالَ : أَنْ تُزَانِيَ بِحَلِيلَةِ جَارِكَ قَالَ وَنَزَلَتْ هَذِهِ الآيَةُ تَصْدِيقًا لِقَوْلِ رَسُـولِ اللهِ صلى الله عليه وسـلم {وَالَّذِينَ لا يَدْعُونَ مَعَ اللَّهِ إِلَهاً آخَرَ وَلا يَقْتُلُونَ النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ وَلا يَزْنُونَ وَمَنْ يَفْعَلْ ذَلِكَ يَلْقَ أَثَاماً}

*'அல்லாஹ்விடம் பாவங்களில் மிகப்பெரியது எது' என்று அல்லாஹ்வின் தூதரிடம் கேட்கப்பட்ட போது, 'அல்லாஹ்தான் உன்னைப் படைத்தவனாக இருக்க அவனுக்கே நீ இணைவைப்பது' என்று பதிலளித்தார்கள். 'பிறகு எது?' என்று கேட்க, 'உன்னுடன் நீ உணவளிக்க வேண்டியதை நினைத்துப் பயந்து உன் குழந்தையைக் கொல்வது' என்றார்கள். 'இதற்கு பிறகு எது?' என்று கேட்க, 'உன் அண்டை வீட்டானின் மனைவியை அவளது இணக்கத்துடன் விபச்சாரம் செய்வது' என்று பதிலளித்தார்கள் நபி ﷺ அவர்கள்.*[10] *நபிகளாரின் இந்தப் பதில்களை உண்மைப்படுத்*

---

10 இமாம் நவவீ ﷺ கூறியுள்ளார்கள்: அண்டை வீட்டார்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும்; அவர்களுடன் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும்; தொல்லைகள் தரக்கூடாது; அவர் பயமில்லாமல் இருக்க வேண்டும் என்றெல்லாம் கட்டளைகள் இருக்கின்ற நிலையில் அண்டை வீட்டுக்காரரின் மனைவியைத் தன் ஆசைக்கு இணங்க வைத்து அல்லது அவளாகவே இணங்கி வந்தாலும் அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு விபச்சாரம் செய்வது என்பது மிகவும் மோசமான, மிகவும் குற்றத்திற்குரிய செயலாகும். அசிங்கமானவர்களால் மட்டும்தான் இப்படிப்பட்ட அசிங்கமானக் காரியத்தைச் செய்ய முடியும். (ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம் 2/261)

# 5

## விபச்சாரம் பெருகுவது மறுமைநாள் நெருங்குவதின் அடையாளமே!

❀

‘அல்லாஹ்வின் தூதரிடமிருந்து செய்தி ஒன்றை நான் செவியுற்றிருக்கிறேன். அதை என்னைத் தவிர வேறு யாரும் உங்களுக்கு அறிவிக்க முடியாது’ என்று அனஸ் ﷺ கூறிவிட்டு, பின்வரும் செய்தியைக் கூறினார்கள்:

إِنَّ مِنْ أَشْرَاطِ السَّاعَةِ أَنْ يُرْفَعَ العِلْمُ، وَيَكْثُرَ الجَهْلُ، وَيَكْثُرَ الزِّنَا، وَيَكْثُرَ شُرْبُ الخَمْرِ، وَيَقِلَّ الرِّجَالُ، وَيَكْثُرَ النِّسَاءُ حَتَّى يَكُونَ لِخَمْسِينَ امْرَأَةً القَيِّمُ الوَاحِدُ

நிச்சயம் மறுமைநாளின் அடையாளங்களாகும் இவை: இஸ்லாமியக் கல்வியறிவு உயர்த்தப்படும், இஸ்லாமைக் குறித்த அறியாமை அதிகரிக்கும், விபச்சாரம் பெருகும், மதுப் பழக்கம் அதிகரிக்கும், ஐம்பது பெண்களை சமாளிக்கும் ஓர் ஆண் என்ற விகிதத்தில் ஆண்கள் குறைந்து பெண்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.[14] *(புகாரீ 5231, முஸ்லிம் 2671)*

---

14 சூரியக் கிரகணத் தொழுகைக்குப் பிறகு தமது பிரசங்கத்தில் விபச்சாரப் பரவலைப் பற்றி நபிகளார் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்பதிலிருந்து கிரகணம் பிடிப்பது எப்படி உலக அழிவை உணர்த்துகிறதோ அது போன்று விபச்சாரம் பெருகுவதும் உலகம் அழியத் தொடங்குகிறது என்பதற்கான அடையாளமாகும் எனக் கல்வியாளர்கள் கூறியுள்ளனர்.

# 8

## மஹ்ரமான ஆண் துணையில்லாமல் பெண் பயணம் செய்வது கூடாது

❀

நபி ﷺ அவர்களிடமிருந்து இப்னு உமர் ؓ அறிவிக்கிறார்கள்:

لاَ تُسَافِرِ الْمَرْأَةُ ثَلاَثًا إِلاَّ مَعَ ذِي مَحْرَمٍ

ஒரு பெண் மூன்று நாள் பயணத்தை மஹ்ரமான ஆணின் துணையில்லாமல் புறப்படமாட்டாள்.[18] (புகாரீ 1087)

அபூ சயீத் அல்குத்ரீ ؓ கூறுகிறார்: என்னை ஆச்சரியப்படுத்திய நான்கு விசயங்களை அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடமிருந்து நான் செவியுற்றேன்:

لاَ تُسَافِرِ الْمَرْأَةُ يَوْمَيْنِ إِلاَّ مَعَهَا زَوْجُهَا أَوْ ذُو مَحْرَمٍ وَلاَ صَوْمَ فِي يَوْمَيْنِ الْفِطْرِ وَالأَضْحَى وَلاَ صَلاَةَ بَعْدَ صَلاَتَيْنِ بَعْدَ الصُّبْحِ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ وَبَعْدَ الْعَصْرِ حَتَّى تَغْرُبَ وَلاَ تُشَدُّ الرِّحَالُ إِلاَّ إِلَى ثَلاَثَةِ مَسَاجِدَ مَسْجِدِ الْحَرَامِ وَمَسْجِدِ الأَقْصَى وَمَسْجِدِي

இரண்டு நாள் தொலைதூரப் பயணத்தைக் கணவன் அல்லது திருமணம் செய்வதற்குத் தடைசெய்யப்பட்டுள்ள (மஹ்ரம்) ஆணின் துணையில்லாமல் ஒரு பெண் பயணம் புறப்படமாட்டாள். ஃபித்ர், அள்ஹா இரண்டு பெருநாட்களிலும் நோன்பு இல்லை. சூரியன் உதிக்கும் வரை பஜ்ருக்குப் பிறகும், சூரியன் மறையும் வரை அஸருக்குக்குப் பிறகும் தொழுகை இல்லை.

---

18 ஒரு பெண்ணைப் பாதுகாக்கும் வழிகளில் ஒன்று, அவளை மஹ்ரமின் துணையில்லாமல் அவள் தனியாகப் பயணிப்பதைத் தடுப்பதாகும். அதுதான் அவளுக்கு முழுப்பாதுகாப்பு. அவள் அந்நிய ஆண்களுடன் தனித்திருப்பதிலும் கவனமாக முன்னெச்சரிக்கையுடன் இருந்து விலகிக்கொள்ள வேண்டும். மஹ்ரம் துணையில்லாமல் தனியாக ஒரு பெண் பயணம் செய்வதைத் தடைசெய்யும் நபிமொழிகள் பல வந்துள்ளன.

# 9

## அனுமதி தேடுவதின் ஒழுக்கங்கள்

❀

அல்லாஹ் கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَدْخُلُوا بُيُوتًا غَيْرَ بُيُوتِكُمْ حَتَّى تَسْتَأْنِسُوا وَتُسَلِّمُوا عَلَى أَهْلِهَا ذَلِكُمْ خَيْرٌ لَكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் வீடுகள் அல்லாத வேறு வீடுகளில் நீங்கள் (நுழையக் கருதினால்,) அதில் இருப்பவர்களுக்கு ஸலாம் கூறி (அவர்களுடைய) அனுமதியைப் பெறுகின்ற வரை நுழையாதீர்கள். இவ்வாறு நடந்துகொள்வது உங்களுக்கே மிக்க நல்லது. (இதனை மறந்துவிடாமல்) நீங்கள் கவனத்தில் வையுங்கள். (குர்ஆன் 24:27)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا لِيَسْتَأْذِنْكُمُ الَّذِينَ مَلَكَتْ أَيْمَانُكُمْ وَالَّذِينَ لَمْ يَبْلُغُوا الْحُلُمَ مِنْكُمْ ثَلَاثَ مَرَّاتٍ مِنْ قَبْلِ صَلَاةِ الْفَجْرِ وَحِينَ تَضَعُونَ ثِيَابَكُمْ مِنَ الظَّهِيرَةِ وَمِنْ بَعْدِ صَلَاةِ الْعِشَاءِ ثَلَاثُ عَوْرَاتٍ لَكُمْ لَيْسَ عَلَيْكُمْ وَلَا عَلَيْهِمْ جُنَاحٌ بَعْدَهُنَّ طَوَّافُونَ عَلَيْكُمْ بَعْضُكُمْ عَلَى بَعْضٍ كَذَلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمُ الْآيَاتِ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ وَإِذَا بَلَغَ الْأَطْفَالُ مِنْكُمُ الْحُلُمَ فَلْيَسْتَأْذِنُوا كَمَا اسْتَأْذَنَ الَّذِينَ مِنْ قَبْلِهِمْ كَذَلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمْ آيَاتِهِ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுடைய அடிமைகளும், உங்களில் பருவமடையாத (சிறிய) பிள்ளைகளும் (நீங்கள் திரைக்குள் அந்தரங்கமாக இருக்கக்கூடிய நேரங்களில்) உங்களிடம் (வருவார்களாயின் உங்களுடைய) அனுமதியை மூன்று தடவைகள் அவர்கள் கேட்க வேண்டும். (அந்த நேரங்களாவன:) 'ஃபஜ்ரு' தொழுகைக்கு முன்னரும் (படுக்கைக்காக

# 11

## பார்வையைத் தாழ்த்துவதும் மறைவுறுப்பைப் பாதுகாப்பதும்

❀

قُـلْ لِلْمُؤْمِنِـينَ يَغُضُّوا مِنْ أَبْصَارِهِـمْ وَيَحْفَظُوا فُرُوجَهُـمْ ذَلِكَ أَزْكَى لَهُـمْ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا يَصْنَعُونَ وَقُـلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْـنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَى جُيُوبِهِنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوْ آبَائِهِنَّ أَوْ آبَـاءِ بُعُولَتِهِنَّ أَوْ أَبْنَائِهِـنَّ أَوْ أَبْنَاءِ بُعُولَتِهِنَّ أَوْ إِخْوَانِهِنَّ أَوْ بَنِي إِخْوَانِهِنَّ أَوْ بَنِي أَخَوَاتِهِنَّ أَوْ نِسَـائِهِنَّ أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُهُنَّ أَوِ التَّابِعِينَ غَيْرِ أُولِي الْإِرْبَةِ مِنَ الرِّجَالِ أَوِ الطِّفْلِ الَّذِينَ لَمْ يَظْهَرُوا عَلَى عَوْرَاتِ النِّسَاءِ وَلَا يَضْرِبْنَ بِأَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِينَ مِنْ زِينَتِهِنَّ وَتُوبُوا إِلَى اللَّهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

*(நபியே!)* அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு நீர் கூறும்: 'அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைக்கட்டும். அவர்கள் தங்கள் கற்புகளையும் பாதுகாத்துக் கொள்ளட்டும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கறிந்து கொள்கிறான்.

*(நபியே!)* அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் நீர் கூறும்: 'அவர்களும் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைக்க வேண்டும்; தங்கள் கற்புகளையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அத்துடன், தங்கள் உடலில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக்கூடியவற்றைத் தவிர தங்கள் (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தை வெளியே காட்டாமல் மறைத்துக்கொள்ள வேண்டும். தங்கள் துப்பட்டாக்களைத் தங்கள் மேலாடைகளின்மீது போட்டு (தலை, முகம், கூந்தல், கழுத்து, நெஞ்சு ஆகியவற்றை மறைத்து)க்கொள்ள வேண்டும். பெண்கள்

# 13

## நங்கையர் நறுமணம் பூசி வெளியே வருவதும் தடுக்கப்பட்டதே!

❀

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﵁ அவர்களின் மனைவி ஜைனப் ﵂ அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது:

إِذَا شَهِدَتْ إِحْدَاكُنَّ الْمَسْجِدَ فَلاَ تَمَسَّ طِيبًا

'உங்களில் ஒருவர் பள்ளிவாசலுக்கு வருவதாக இருந்தால் அவர்கள் நறுமணம் பூசிக்கொள்ள வேண்டாம்' என அல்லாஹ்வின் தூதர் ﷺ எங்களிடம் கூறினார்கள்.[30] (முஸ்லிம் 443)

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக அபூ ஹுறைறா ﵁ கூறினார்கள்:

لاَ تَمْنَعُوا إِمَاءَ اللَّهِ مَسَاجِدَ اللَّهِ وَلَكِنْ لِيَخْرُجْنَ وَهُنَّ تَفِلاَتٌ

அல்லாஹ்வின் பள்ளிகளில் அல்லாஹ்வின் அடிமைப் பெண்களை நீங்கள் தடுக்காதீர்கள். எனினும், அவர்கள் நறுமண வாசனை இல்லாதவர்களாக அவர்கள் வெளியே வரட்டும்.[31] (சுனனு அபீ தாவூது 565, ஸஹீஹு அபீ தாவூது 574)

---

30 ஒரு பெண் வீட்டிலிருந்து வெளியே புறப்படும்போது நறுமணம் பூசிக்கொண்டு செல்வது தடைசெய்யப்பட்ட ஒன்று. அதுதான் ஆண்களைப் பிரச்சினைகளில் சிக்கவைக்காமல் இருக்கும். வெளியே செல்லும் பெண்கள் அதற்கான ஒழுக்கங்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக அவள் சில அவசியத் தேவைகளுக்காக வெளியே வரும்போது ஆண்களின் ஆசையைத் தூண்டும் அளவுக்குத் தன்மீது நறுமணம் கமழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

31 தங்களது நறுமணங்களால் ஆண்களின் மனங்களை அலைபாயச் செய்துவிடக் கூடாது என்பதால்தான் பெண்கள் நறுமணம் பூசிக்கொண்டு வெளியே சுற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஆசையைத் தூண்டும் ஆடைகளும், அழகைக் காட்டும் ஆபரணங்களும் இதே காரணங்களுக்காகத்தான் தடை செய்யப்பட்டுள்ளன.